நல்லது என்று கருதுகிறோம். அதனால் அவர்கள் நிலைமை நன்றாகி, ஊழியர்களுக்கு வேலை உயர்வு கிடைக்க நல்ல வழி வகுக்கும் என்பதால், இதை ஆய்ந்து முடிவு எடுப்பதாக இருக்கிறோம்.

Triplicane Urban Co-operative Society.

*108 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the order of supersession of Triplicane Urban Co-operative Society in Madras has been rescinded; and

(*b*) how it is governed or managed after this lifting of supersession?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) டி.யு.ஸி.எஸ். நிறுவனத்தைப் பொறுத்து, கலைப்பு ஆணை 21—12—1969 பிற்பகலிலிருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது.

(இ) அதன் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட 14 இயக்குநர்களும், நியமனம் செய்யப்பட்ட நான்கு இயக்குநர்களும் கொண்ட குழுவிடம் இந்தச் சங்கத்தின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM: May I know what are the reasons for superseding the Board of Directors of TUCS? What was the offence committed by that management? After the supersession is the TUCS working satisfactorily? Is it showing profit? Is it not a fact that the super-market which is run by the TUCS is working at a heavy loss and proving to be a white elephant? What is the position now after the supersession has been cancelled?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The TUCS was superseded under Section 72 of the T.C.S. Act, 1961, as the Registrar was of the opinion that the Committee was not functioning properly. On that ground it was superseded. After supersession, I have no actual report about the functioning of the society. But it is considered that after the cancellation of supersession, the society is functioning properly.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, regarding the supersession of the T.U.C.S. a writ petition was pending in the High Court. May I know from the Hon. Minister, what is the result of that writ petition?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I have nothing on record in my hand at the moment: about the writ petition. I may say that the previous order has been rescinded from 21st December 1969 and a newly elected committee is in control of the society.

THIRU K. VINAYAKAM: Sir, may I know from the Hon. Minister, whether it is a fact that as a result of the writ petition, the Government were forced to rescind the order of supersession;

1970 ஆகஸ்ட் 28]

Now what is the position regarding the Supermarket in the City? Is it still being managed by T.U.C.S. and if so, what is its profit and loss account ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, as I have already stated I have nothing on record at the moment to say anything about the writ petition. Regarding the Supsermarket and the functioning of the society, it is understood that their functioning is proper and in fact many of the Supermarkets are now running at a profit.

பழனியாண்டவர் கோயில் அறக்காவலர் குழு

* 109 வின.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

பழனியாண்டவர் கோவிலுக்கு அறங்காவலர் குழுவில் Trustee Board சட்டமன்ற உறுப்பினர் யாரேனும் இடம் பெற்றுள்ளனரா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை, ஆனால், பாராளு மன்ற உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி அவர்கள் கோவில் அறங்காவலர் குழுவில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, பழனியாண்டவர் கோவில் தமிழ்நாட்டிலேயே மிகவும் பிரபலமான கோவில்—திருப்பதிக்கு அடுத்தபடியாக இருக்கிறது. ஆகவே, இந்த மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொருவரை அந்தக் கோவில் நிர்வாகக் குழுவில் நியமித்தால் மாநிலம் முழுவதற்கும் பிரதிநிதித்துவம் இருக்கும். அப்படிச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த கோவில்கள் தமிழ்நாட்டில் 300 இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தையும் சேர்ந்த ஒவ்வொருவரைப் போடுவதால் சிரமம் ஏற்படும் என்றே அந்த அந்தப் பகுதி மக்களைக் கொண்டே போடப்படுகிறது.

விலைகள் ஏற்றம்

* 90 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சர்க்காரின் 1969–70-வது ஆண்டின் வரி உயர்வு அதிகரிப்பின் காரணமாக நமது ராஜ்யத்தில் எந்த அளவுக்கு விலைவாசி உயர்ந்துள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மத்திய வரி விதிப்பிற்கும், நமது மாநிலத்தில் விலைவாசிகளில் ஏற்பட்டுள்ள உயர்வுக்கும் உள்ள தொடர்பு எந்த அளவில் உள்ளது என்பதைச் சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல இயலவில்லை.